# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 29/2022** | **நாள் – 29.01.2026** | **சாட்சி –எ.ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பாலாஜி | தந்தை பெயர் | திரு.புருஷோத்தமன் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | உதவி மேலாளர் | வயது | 35 |

**<u>முதல் விசாரணை</u>:**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. TN 31 U 9797 மகேந்திரா மேக்சி கேப் வேன் வாகனத்தின் காப்பீடு பாலிசி உண்மை நகல் **எ.ம.சா.ஆ.1.** மனுவை எங்கள் நிறுவனத்தை பொருத்து தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும்,

கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனால் தான் அவர் மீது முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனமானது விபத்து தேதியில் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, விபத்து தேதியில் காப்பீடு பாலிசி நடைமுறையில் இருந்ததால் எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் பாலிசி விதி மீறல் இருந்தாலும் நாங்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.29 16:47:38 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.